# அரசியலுக்காக மட்டும்தான் அ.தி.மு.க. போராட்டம் நடத்துகிறது!

## ‘நியூஸ் 18’ தொலைக்காட்சி விவாதத்தில் மார்க்சிஸ்ட் கனகராஜ் – பத்திரிகையாளர் குபேந்திரன் பேட்டி!

**சென்னை, ஜூலை 2 –**

**நியூஸ் 18 தொலைக்காட்சி ‘சொல்லதிகாரம்’ நிகழ்ச்சியில் திட்டங்களைத் தீவிரப்படுத்தும் தி.மு.க. அரசு, போராட்டங்களை கூர்மைப் படுத்தும் அ.தி.மு.க. ‘மக்கள் நலனா, அரசியல் கணக்கா’ என்ற தலைப்பில் விவாதம் நடைபெற்றது. இதில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மூத்த தலைவர் கனகராஜ், மூத்த பத்திரிகையாளர் குபேந்திரன் ஆகியோர் சிறப்பு பேட்டி அளித்தனர்.**

**மார்க்சிஸ்ட் மூத்த தலைவர் கனகராஜ்:**

போராடுவது எல்லா கட்சிகளுடைய உரிமை, அதில் எந்தவிதமான பிரச்சினையும் கிடையாது. ஆனால் எங்களை பேச விடவில்லை என்று சொல்லிவிட்டுப் போராடுவது நியாயமில்லை. ஒரு நாள் ஒரு மணி நேரம் அவர்கள் தாமதித்து இருந்தால், இதை சட்டமன்றத்திற்குள்ளேயே பேசி இருக்கலாம். இரண்டாவது நாள் ஒரு 24 மணி நேரம் பொறுத்து இருந்தால் இரண்டாவது நாள் பேசி இருக்க முடியும். அன்றைக்கு அந்த நொடியில் பேசவிடவில்லை என்று மூன்று நாள். இப்படி அ.தி.மு.க.வினரை பேசவிடவில்லை. தினமும் சென்று அந்த ஒரு மணி நேரத்தில் பேச வேண்டும் என்று மீதி இருக்கக் கூடிய பத்துமணி நேரம், 12 மணி நேரத்தை விட்டுவருவார்களா என்பது தான் என்னுடைய கேள்வி.

இதில் அவர்களுடைய நோக்கம் இருக்கிறது. முதலில் அவர்கள் செய்ததை எங்களால் புரிந்து கொள்ள முடிகின்றது. ஒரு எதிர்க்கட்சி செய்ய வேண்டிய முறையில், அவர்கள், என்னதான், எடப்பாடி முதலமைச்சராக இருக்கும் போது, 13 பேர் கொல்லப்பட்டதை டி.வி.யில் பார்த்து தெரிந்து கொண்டதாக கூறினாலும் கூட, இன்றைக்கு அவர்களுக்கு இருக்கக் கூடிய அந்த அக்கறையை என்னால் புரிந்து கொள்ள முடிகின்றது. அந்த அக்கறை ஒரு மணி நேரம் கழித்து செய்வதற்குப் பதிலாக அடுத்த நாளும் போய் இந்த நேரத்தில் பேச வாய்ப்பு கொடுக்க மாட்டார்கள் என்பது தெரிந்து அந்த நேரத்தில் போய் சண்டை போடுவது என்பது மக்கள் நலன் சார்ந்ததா? அங்கு தான் அரசியல் இருக்கிறது.

அடுத்த நாள் சரி, அதற்குப் பின்னால் கூட சென்று போராட்டம் செய்திருக்கலாம். இங்கே செம்மலை கூறினார். அவர்கள் கூட்டணி அதர்மத்திற்காக வாய் மூடி இருந்ததினால் பல விஷயங்கள் அவர்களுக்கு மறந்து போய் விட்டது என்று நினைக்கிறேன். மூன்று ரயில்கள் மோதிக் கொண்ட பிறகு, சேப்டி டிப்பார்ட்மெண்ட்டில் மட்டும் மொத்தமாக 14 இலட்சம் பேர் இருக்க வேண்டிய இடத்தில், மூன்று இலட்சத்து 20 ஆயிரம் பேர் காலி இடங்கள் இருக்கிறது. அந்த 3 இலட்சத்து 20 ஆயிரம் காலி இடங்களில் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் வரை சேப்டி டிப்பார்ட்மெண்டில் மட்டும் இருக்கிறது. இதனை நாங்கள் விடாமல் வலியுறுத்தி வருகிறோம் அதனை செய்ய மறுக்கிறார்கள்.

கான்பூரில் இருந்து தொடர்ச்சியாக இந்த ரயில் விபத்துக்களை பார்த்துக் கொண்டே வந்தால், அது ஒரு விபத்து நடக்கின்ற விஷயமாக இருக்கின்ற போது இது தவறு. எனவே நீங்கள் ராஜினாமா செய்யுங்கள் என்று கூறினோம். அவர்கள் ஆட்சியில் 13 பேரை சுட்டுக் கொன்ற போது கூட நாங்கள் அவர்களை ராஜினாமா செய்யுங்கள் என்று கூற வில்லை. ஆனால் அவர்கள் ஒரு சட்டமன்றத்தில் பேசுவதற்கு எந்த இடத்தில் வருகிறீர்கள். ஒரு பொதுக்கூட்டம் போடுவதற்கு நாங்கள் நீதிமன்றத்திற்குச் சென்றுதான் அனுமதி வாங்கிட்டு வந்தோம் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஸ்டெர்லைட் விஷயத்தில் அந்த போலீஸ் துப்பாக்கிச் சூட்டை கண்டிப்பதற்கு கூட, நான் என்ன கேட்கிறேன். நீங்கள் இருந்த போது, இதே போலீஸ் தானே. பல்வீர் சிங் என்பவர் பல்லை பிடுங்கினார். அவர்கள் கண்டித்தார்களா?,

ஆனால் அதற்கு மாறாக அம்பா சமுத்திரத்தில் இருக்கும் எம்.எல்.ஏ. இசக்கி சுப்பையாவை விட்டு அதனை ஆதரித்து ஒரு பேட்டி கொடுத்தார்கள். அந்த பேட்டி கூட என்னிடம் இருக்கிறது. அப்போது அ.தி.மு.க.வினர் மக்கள் பக்கம் நிற்கவில்லை. நியாயமாக விசாரியுங்கள் என்று கூட சொல்லவில்லை. நாங்கள் கூட்டணிக் கட்சியாக இருந்தால் கூட இதனை கட்டாயம் விசாரிக்க வேண்டும். அவரை சஸ்பெண்ட் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தோம். ஆனால் அவர்கள் இசக்கி சுப்பையாவை வைத்து அவர் நல்ல மனுஷன், அப்படி என்று சொல்லி அவரை பேட்டி கொடுக்க வைத்தார்கள். இது எந்த வகையில் நியாயமானது.? எங்களுக்கு உண்மையிலேயே தமிழக மக்கள் மீது எல்லா நம்பிக்கையும் இருக்கிறது. நான் சொல்வது தி.மு.க. ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். அவர்கள் நிறைவேற்றின பிறகு கூட கூட்டணி கட்சியாகிய நாங்கள் எல்லாம் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தோம். அது சரியில்லை என்று. அதாவது வேலை நேரம் குறித்த சட்டத்தில்.

அப்போது அ.தி.மு.க. என்ன செய்தது.? அதன் பொதுச் செயலாளர் பேசினாரா?. இதுமிகவும் சீரியஸான விஷயம் தான். இதில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பேசினாரா? என்று இங்கே இருக்கும் செம்மலை சொல்ல வேண்டும். எனவே நான் சொல்வது, அவர்கள் உண்மையிலேயே மக்களுக்கான பிரச்சினையில் நிற்கட்டும். அவர்களுடைய போராட்டங்களை ஆதரிக்கலாம், வாழ்த்தலாம்.

ஆனால், நான் சொன்னதில் எல்லாவற்றிலும் அ.தி.மு.க.வினர் எங்கே நிற்கிறார்கள் என்று பார்த்தால் அவர்கள் அரசியல் மட்டும் தான் செய்ய வேண்டும் என்று நினைக்கிறார்களே தவிர வேறு ஒன்றுமில்லை.

எடப்பாடி பழனிச்சாமி என்றைக்கு போய் ஆர்ப்பாட்டம் செய்தார். அதற்கு முன்பு தோழர் கே.பாலகிருஷ்ணன் சென்று ஆர்ப்பாட்டம் செய்துவிட்டு வந்தார். கே.பாலகிருஷ்ணன் வேங்கை வயலுக்குப் போனார். எடப்பாடி பழனிச்சாமி சென்றாரா.? கே. பாலகிருஷ்ணன் அந்த மேல்பாதிக்குப் போனார், எடப்பாடி போனாரா?, பாலகிருஷ்ணன் ஸ்ரீமதி விஷயத்திற்காக போய் ஆர்ப்பாட்டம் போராட்டம் நடத்திட்டு வந்தார். எங்கள் மாதர் சங்கம் டி.ஜி.பி. ஆபிஸை முற்றுகை யிட்டது. அவர்கள் செய்தார்களா.? ஏதோ கம்யூனிஸ்ட் கட்சிகள் பேசவில்லை என்கிறார். ஒரு வேளை அவர் கொஞ்சம் காதையும், கண்ணையும் திறந்து வைக்கச் சொல்ல வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

ஒரு கட்சி ஆர்ப்பாட்டம் செய்யவில்லை என்றால் ஏன் செய்யவில்லை என்று கேட்கலாம். ஆனால் நான் கூறிய விஷயத்தில் எல்லாவற்றிலும் அ.தி.மு.க.வும் எடப்பாடி பழனிச்சாமியும் என்ன செய்து கொண்டிருந்தார்கள்.?

இங்கே செம்மலை பேசினார். எடப்பாடி போராட்ட வழி முறைகளில் மௌனமும் ஒரு வழி முறையா என்று நான் அவரை கேட்கிறேன். வேலை நேரம் சம்மந்தமான மசோதாவிற்கு அவரிடமிருந்து எந்த அறிக்கையும் வரவில்லை. தவறு செய்கின்ற போலீஸ் ஒருவர் என்று வருகின்ற போது அதை கண்டிக்க முன்வரவில்லை. அவரை பாராட்டினார்கள். என்னைப் பொறுத்தவரையில் எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்துவது அவசியம் தான். ஆனால் இதில் அரசியல் மட்டும் செய்வதற்கு போராட்டம் நடத்துகிறார்கள். அவர் ஆட்சி காலத்தில் கூட டி.ஜி.பி. ஆபிஸை பெண்கள் முற்றுகை யிட்டார்களா? நாங்கள் கூட்டணியில் இருக்கிறோம். நாங்கள் முற்றுகை யிட்டோம். எடப்பாடி பழனிச்சாமி என்ன செய்தார் என்றுதான் நான் கேட்கிறேன். ஸ்ரீமதி விஷயத்தில் எடப்பாடி பழனிச்சாமி என்ன செய்தார் என்று தான் கேட்கிறேன். இங்கே யாரும் அதற்கு பதில் சொல்ல மாட்டேன் என்கிறீர்கள். அவர்கள் சட்டத்தை நிறைவேற்றிவிட்டார்கள். நிறைவேற்றியப் பிறகு நாங்கள் இதனை ஏற்கவில்லை என்று கூறினோம். எடப்பாடி பழனிச்சாமி அப்போது என்ன செய்தார் என்று தான் கேட்கிறேன்.




**குபேந்திரன்:**

திட்டங்களை தீவிரப்படுத்துகின்ற தி.மு.க. – போராட்டங்களை கூர்மைப்படுத்துகின்ற அ.தி.மு.க. என்று தலைப்பு வைத்து இருக்கிறீர்கள். இதில் மக்கள் நலனா, அரசியல் கணக்கா. இதில் திட்டங்களை கொண்டு வருவதில் மக்கள் நலனும் இருக்கிறது. அரசியல் கணக்கும் இருக்கிறது.

அதேபோல் ஒரு ஆளும் கட்சியை எதிர்த்து ஒரு எதிர்க்கட்சி நடத்துகின்ற ஒரு போராட்டத்தில் மக்கள் நலனும் அடங்கி இருக்கிறது. அரசியல் கணக்கும் இருக்கிறது. அப்படித்தான் கள்ளக்குறிச்சி போராட்டத்தை அ.தி.மு.க. முன்னெடுக்கிறது. இந்த விஷயத்தில் இங்கே தோழர் கனகராஜ் கூறியது மாதிரி அந்த ஒரு மணி நேர விஷயம். அப்படி என்று திரும்ப திரும்ப இன்றைக்கு வரைக்கும் ஐந்து நாட்களாக போராடிக்கிட்டு இருக்கிறார்கள். எங்களை பேச மறுக்கிறார்கள். என்னை அங்கு வந்து பேச வைத்து அது நேரடியாக ஒளிபரப்பு செய்திருந்தால் கிழி கிழி என்று கிழித்திருப்பேன், இப்படி எல்லாம் எடப்பாடி சொல்கிறார். இது நல்ல விஷயம். உண்மையிலேயே ஒரு கள்ளச்சாராய சாவுக்கு எதிர்க்கட்சி எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் அரசியலையும் எடப்பாடி முன்னெடுக்கிறார். உண்மையிலேயே வரவேற்கப்பட வேண்டிய ஒரு விஷயம். சரி, இதற்கு முன்பு அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் என்றாவது ஒரு நாள் ஒரு முன்னுதாரணமாக ஒரு மக்கள் பிரச்சினைக்கு அதி முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் பத்தாண்டு காலத்தில் எதுவுமே நடக்கவில்லையா? எத்தனையோ நடந்தது. ஒரு வேளையாவது கேள்வி நேரத்தை ஒத்திவைத்து விட்டு வாங்க என்று கூப்பிட்டு இவர்களும் பேசியதில்லை. தி.மு.க.வும் பேசியதில்லை.

அதனால் இல்லாத நடைமுறையை அவர்கள் மட்டும் கொண்டு வர வேண்டும் என்று துடிக்கின்றது அ.தி.மு.க. அதற்கு என்ன காரணம் . அந்த ஒரு மணி நேரம் கழித்து அவர்களுக்கு அந்த இடத்தில் பேசுவதற்கு வாய்ப்பு மறுக்கப்பட்டால் அல்லது பேசி அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பட்டால் வெளியே வாங்க. அதே கவரேஜ் டபுள் மடங்கு கிடைக்கும். இப்போது இங்கே எடப்பாடி அவர்கள் சொன்னார். என்னவென்று ? என்னை விட்டு இருந்தால் கிழி கிழி என்று கிழித்திருப்பேன் என்று கூறினார் எடப்பாடி. துரைமுருகனுக்கு பதில் சொன்னார். அவர்கள் என்ன செய்திருக்க வேண்டும். இன்றைக்கு வளர்ந்த நாடுகளில் போராட்டமோ, ஆர்ப்பாட்டமோ, உண்ணாவிரதமோ எது நடந்தாலும் மக்களுக்குத் துன்பம்தான். மக்கள் பிரச்சினைக்காக கையில் எடுத்துக் கொண்டு போராடினால் அது எத்தனை பெரிய துன்பம் என்று நாளை காலையில் பேப்பரில் வரும், எத்தனை ஆயிரம் வாகனங்கள் நெரிசலுக்குள்ளானது என்று. இன்றைக்கு சிட்டி முழுவதும் மெட்ரோக்காக தோண்டி போட்டு இருக்கிறார்கள். அதனால் ஒரு பெரிய கல்யாண மண்டபம் எடுங்கள் பொதுக்குழு செயற்குழு கூட்டுகிறார்கள் இல்லையா, அங்கே போய் கிழி கிழி என்று கிழியுங்கள். எந்த மீடியாவாவது ஒளிபரப்பாமல் இருந்து விடுமா, விட்டு விடுமா, பல மீடியாக்கள் எடப்பாடி பேசுவதை தடுக்கின்றன. அப்படி இல்லை என்றால் அரசாங்கம் கேபிளை பிடித்து இழுத்து விடுகின்றன என்று சொல்வார்களா.?




(சட்டமன்றத்தில் பேசினால் பதிவாகி இருக்குமே என்று நெறியாளர் கேள்வி எழுப்பினார்) நியாயமான விஷயம்தான். சட்டமன்றத்தில் ஒரு மணி நேரம் கழித்து பேசி இருக்கலாமே. சட்டமன்றத்தில் பதிவு செய்தால் கூட அவைக் குறிப்பில் எங்கேயோ இருக்கும். அதனை மக்கள் எடுத்து தேடிப் படிக்க தமிழ்நாட்டில் இருக்கின்ற எல்லா மக்களும் சட்டமன்ற நூலகத்திற்கு சென்று படிப்பதில்லை. அந்தச் செய்தி பேப்பரில் வரும். வெளியே வந்து பேட்டி கொடுக்கிறார்கள்.

சட்டமன்றத்தில் பேசுவதற்கான வாய்ப்பு கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதனை அவர் ஒரு மணி நேரம் கழித்து பேசி இருக்கலாம். ஒரு மணி நேரம் கழித்து அவர் கருத்தை பதிவு செய்திருக்கலாமே. திரும்ப திரும்ப அவர்கள் உள்ளே செல்ல ஏன் மறுக்கிறார்கள் தெரியுமா.? அதனை இங்கே இருக்கின்ற செம்மலை உணருவார் என்று நினைக்கிறேன். புரிந்து கொள்வார் என்று நினைக்கிறேன்.

ஏனென்றால் அ.தி.மு.க. நாற்பதுக்கு நாற்பது தோல்வியடைந்த பிறகு அங்கே தி.மு.க.வினர். பேசும் போது இடையிடையே இந்தப் பதிலைச் சொல்வார்கள், கேள்வி கேட்பார்கள், கூட்டணி கட்சி காங்கிரஸ் கேள்வி கேட்கும். கம்யூனிஸ்ட், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி கேட்கும் . இவர்கள் எல்லோருமே எதனை நோக்கி சொல்வார்கள் என்றால் தோல்வியைப் பற்றி சொல்வார்கள். மூன்றாண்டு காலம் தி.மு.க.விற்கு எதிராக மக்கள் பொங்கி எழுவார்கள் என்று அ.தி.மு.க.வினர் சொன்னீர்களே, ஆனால் மக்கள் பொங்கி எழவில்லை எத்தனை இடங்களில் தோற்றுப் போய் இருக்கிறீர்கள், எத்தனை இடங்களில் டெபாசிட் போய் இருக்கிறீர்கள், எத்தனை இடங்களில் நான்காம் இடத்தில் தள்ளப்பட்டு இருக்கிறார்கள் என்ற செய்தியெல்லாம் சட்டமன்றத்தில் எழும். அதனை தவிர்ப்பதற்காக எடப்பாடிக்கு ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்தது. அதுதான் இந்த பிரச்சினைகள். கள்ளச்சாவு. மக்கள்நலப்பிரச்சினையில் அவர்கள் என்ன செய்து இருக்கணும் தெரியுமா, நான் ஒன்று சொல்கிறேன். அ.தி.மு.க.விற்கு ஒரு அரிய வாய்ப்பு கிடைத்தது. அந்த வாய்ப்பை அவர்கள் தவற விட்டு விட்டார்கள். தி.மு.க., காங்கிரஸ் கூட்டணி உடைந்து விடாதா என்று கேள்வி கேட்கிறார். 250 வருஷத்திற்கு அக்கிரிமெண்ட் போட்டுட்டிங்களா என்று கேள்வி கேட்கிறார் இல்லையா.

இந்தக் கள்ளச் சாராய சாவுக்காக ஒரு உண்மைக் கண்டறியும் குழு அ.தி.மு.க.வை போடச் சொல்லுங்க. இதில் எல்லா கட்சி உறுப்பினர்களையும் சேர்க்கச் சொல்லுங்க. தி.மு.க.கூட இருக்கட்டும். காங்கிரஸ் கூட்டணி இருக்கலாம். எல்லா கட்சியையும் சேர்க்கலாம்.

இந்த உண்மை கண்டறியும் குழு அந்த இடத்தில் போய் விசாரணை நடத்துவதற்கு அ.தி.மு.க. தயாராக இருக்கிறதா ? என்று கேளுங்கள் ஏன் என்று கேட்டால், அதில் பத்தில் இரண்டு பேர் எப்படியும் ஒரு கட்சியில் மாட்டுவார்கள். அ.தி.மு.க. ஒரு உண்மை கண்டறியும் குழு போட்டு விசாரணை நடத்தட்டும். அதில் யார் யார் மாட்டுவர்கள் என்று பார்ப்போம். இந்த பிரச்சினை 48 மணி நேரம் இன்னும் சொல்லப்போனால் 60 மணி நேரம் அதற்குப் பிறகு என்ன பிரச்சினை எடுத்து அ.தி.மு.க.வினர் போராடுவார்கள். இவர்கள் அடுத்த போராட்டம் எதை வைத்துப் போராடப் போறாங்க. அடுத்த சட்டமன்றத் தேர்தலுக்கு தி.மு.க. தயாராகிக் கொண்டிருக்கிறது. திட்டங்களை அறிவித்துக் கொண்டிருக்கிறது. ஏதோ பேருக்கு மதுரை எய்ம்ஸ் என்று சொல்லிட்டு அதனை அவர்கள் கட்டாமல் விட்டு விட்டது.

தி.மு.க.விற்கு எதிரான பிரதான கட்சி அ.தி.மு.க. என்பதை நான் மறுக்கவே மாட்டேன். முன்பும் மறுக்கவில்லை, இப்போதும் மறுக்க மாட்டேன். ஒரு வேளை இந்த கள்ளச் சாராய சாவு இந்தத் தேர்தல் அறிவிப்புக்கு முன்பாக நடந்து இருக்கு என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது மட்டும் அ.தி.மு.க. போய் நின்று இருக்குமா. நிற்காது. இப்போது என்ன பிரச்சினை என்றால். வட மாவட்டத்தில் தி.மு.க. ஆட்சி. பென்னாகரத்தில் அ.தி.மு.க. மூன்றாவது இடத்திற்கு சென்று விட்டது. அந்த மாதிரியான நிலைமை மீண்டும் வந்துவிடக் கூடாது , வட மாவட்டத்தில் பாட்டாளி மக்கள் கட்சி போட்டியிடும் போது பா.ம.க. இரண்டாம் இடத்தைப் பிடித்து, அ.தி.மு.க. மூன்றாவது இடத்தை பிடித்தால், இப்படி கடுமையான விமர்சனங்களை தவிர்ப்பதற்காகத்தான் அ.தி.மு.க. போட்டியிடவில்லை. அ.தி.மு.க.வுக்கு மக்கள் நலனில் உண்மையிலேயே அக்கறை இருந்தால் மீண்டும் நாளைக்கு கள்ளச் சாராயம் கல்வராயன் மலையில் இருக்கக் கூடாது என்றால், என்ன தீர்வு, அதற்குத் தான் உண்மை கண்டறியும் குழு போடவேண்டும் என்று கூறினேன். எத்தனை கட்சிகாரர்கள் இதில் எத்தனை பேர் சம்பந்தப்பட்டு இருப்பார்கள் என்பது தெரிய வரும். அப்போது முடிவெடுங்கள். இங்கே 2023 இல் செந்தில் குமார் எம்.எல்.ஏ., ஒத்தி வைப்பு தீர்மானம் கொடுத்தார் என்று சொல்கிறார்களே, இப்போது நான் கேட்கிறேன் அங்கே இருக்கின்ற ஒருத்தர் தான் கண்ணுகுட்டி என்கிற கோவிந்தராஜ் மட்டும் தான் விற்கிறாரா, அங்கே எத்தனை பேர் விற்கிறார்கள் தெரியுமா, கீழ் இருந்து போகின்ற வெல்லம், பட்டை எல்லாமும் டாடா வண்டியில், ஆட்டோவில் போகிறது. இன்றைக்கு இவர்கள் எல்லாம் பேட்டி கொடுக்கிறார்கள் இல்லையா. . அப்போது கல்வராயன் மலையில் கள்ளச்சாராயம் காய்ச்சுகிறார்கள் என்பது பஞ்சாயத்து தலைவருக்கு, ஊர்த் தலைவருக்கு தெரியாதா,எல்லா மக்களுக்கும் தெரியும். ஏன் இவர்கள் எல்லாம் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களை , விற்பவர்களை பிடித்து கொடுக்கவில்லை. தி.மு.க.விற்கு கெட்ட பெயர் ஏற்படுத்துவதற்காக. அ.தி.மு.க.வினர் இவர்களை பிடித்து கொடுத்து இருக்கலாமே. ஏன் பிடிச்சு கொடுக்கவில்லை?

கள்ளச்சாராயம் ஒழிக்கப்படும் என்றால் இதற்கான தீர்வு என்ன? அதனை நோக்கி அ.தி.மு.க. பயணம் செய்ய வேண்டும் என்றுதான் நான் கேட்டுக் கொள்கிறேன். கூட்டணி கணக்குக்காகத்தான் தே.மு.தி.க.வும் ஆதரித்தார்கள். இவர்கள் எல்லாம் என்ன செய்கிறார்கள் என்றால் தி.மு.க. காங்கிரஸ் கூட்டணியை உடைப்பதற்கு பலனளிக்கவில்லை. இரண்டாவது திட்டங்களை தீட்டிக் கொண்டே போகிறார்கள். தொடர்ச்சியான திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள். ஆயிரம் ரூபாய் திட்டத்தை நிறைவேற்றிவிட்டார்கள். கலைஞர் நூலகம் கட்டிவிட்டார்கள். இரண்டாயிரம், மூவாயிரம் பேர் வருவதால் திருச்சியில், கோவையில் கட்ட வேண்டும் என்று கூறுகிறார்கள். திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்ற அரசுக்கு அடுத்தடுத்து திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள். ஏன் என்றால் மக்கள் நலன் தான் அரசின் கணக்கு. 2026 இல் சட்டமன்றத் தேர்தல் வருகிறது. அதனால் கண்டிப்பாக இந்தத் திட்டங்களை நிறைவேற்றிட வேண்டும். ஆனால், அ.தி.மு.க. கூட்டணியை பலப்படுத்த வேண்டிய ஒரே ஒரு பிரச்சினையில் இருக்கிறது. அதற்காக நாம் தமிழர் கட்சியை அழைக்கிறார்கள். தே.மு.தி.க. மேடைக்கு வந்துவிட்டார்கள். எஸ்.டி.பி.ஐ. ஏன் வரவில்லை என்று தெரியவில்லை. ஜி.கே. வாசன் ஏன் வரவில்லை என்று தெரியவில்லை. பா.ம.க., நாம் தமிழர், இவை எல்லாம் அ.தி.மு.க. கூட்டணியில் சேர்வதற்கான வாய்ப்பு அதிகமாக இருப்பதாகவே நான் கருதுகிறேன்.

இவ்வாறு மார்க்சிஸ்ட் கனகராஜ், மூத்த பத்திரிகையாளர் குபேந்திரன் ஆகியோர் விவாதத்தில் பங்கேற்று பேட்டியளித்தனர்.